பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir


விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை 17.05.2022 கதிர் 193

### இனி இது ரகசியம் அல்ல!

தமதுகட்சியில்ஒற்றைஆளாக நாடாளுமன்றுக்குப் போய் பிரதமராகியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இப்போது அமைத்திருக்கும் அரசுதான் அண்மைக் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அரசுகளில் மிக வலிமையானது என்று நினைக்கிறேன்.
☞2

# நாடு சூறையாடப்பட்டது எப்படி? விசாரிக்க நாடாளுமன்றக் குழு!

## பிரதமர் ரணில் திட்டம்



கொழும்பு, மே 17

கடந்த இரண்டரை வருட காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரம் இவ்வளவு தூரம் மிக மோசமான அதல பாதாள நிலைக்கு விழுந்தமையின் பின்னால் பெரும் மர்மம் சூழ்ந்து இருப்பதாகக் கருதும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதுபற்றி விசாரணை நடத்தி, விவரங்களைக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனத் தான் கருதுகின்றார் என்று குறிப்பிட்டுள்ளார்.
☞12

## முள்ளிவாய்க்காலுக்கான பேரணி பிரபா வீட்டிலிருந்து புறப்பட்டது



வல்வெட்டித்துறையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'இன விடுதலை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம்' என்ற கருப்பொருளில் இந்த பேரணி புறப்பட்டு நாளை முள்ளிவாய்க்காலைச் சென்றடையும்.

வல்வெட்டித்துறை
☞12

## இராணுவப் பாதுகாப்பு என் வீட்டுக்கு வேண்டாம்

### சிறிதரன் எம்.பி. கோட்டாவுக்குக் கடிதம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 17

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லத்திற்கு பாதுகாப்பு என்னும் பெயரில் எனது இல்லம் முன்பா. நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை உடன் அகற்றுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு நேற்றுத் தாம்
☞12

## யாழ்.தொழில்நுட்ப மாணவரின் கலட்டி வீட்டின் மீது தாக்குதல்



யாழ் கலட்டிப் பகுதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி பயிலும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது நேற்றுத் திங்கட்கிழமை இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி தப்பிச்
☞12

### பிரதமர் ரணில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை

11 ஆம் பக்கத்தில்...

## மீள ஊரடங்கு

நாடளாவிய ரீதியில் நேற்று மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

நேற்று இரவு 8 மணி முதல் இன்று அதிகாலை
☞12

## 3 மணி 40 நிமிடம் இன்று மின்வெட்டு

நாட்டில் இன்று மூன்று மணித்தியாலங்கள் நாற்பது நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப்
☞12

## பாடசாலைகளும் இன்று தொடக்கம் வழமைக்கு வரும்

இன்று முதல் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலை நடவடிக்கைகளும் வழமை போன்று ஆரம்பிக்கப்படும்
☞12

## மேற்குலகு, இந்தியாவின் விருப்பப்படியே ரணிலின் அரசு என்கிறார் கஜேந்திரகுமார்

### அதற்குத் தமிழ்க் கட்சிகள் முண்டு என அவர் சீற்றம்



(கலையமுதன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 17

முற்றுமுழுதாக மக்களால் நிராகரிக்கப்பட்டு தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி ஏற்றமை அனைத்து ஜனநாயக விதிமுறைக்கும் முரணானதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
☞12

## 80 ஆயிரம் சிலிண்டர்கள் இனி தினசரி விநியோகம்



நாளை மே மாதம் 18 ஆம் திகதி முதல் தினசரி 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.
☞12

### சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும்

# ஜோன்ஸ்டன் உட்பட மொட்டுக் கட்சிப் பிரமுகர்கள் 21 பேரைக் கைது செய்ய சட்டமா அதிபர் உத்தரவு!

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிசாந்த, சஞ்சீவ எதிரிமான்ன, மிலான் ஜெயதிலக மற்றும் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட 22 பேரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசாங்கமும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி காலிமுகத்திடலுக்கு முன்பாக 'கோட்ட கோ கோம்' மற்றும் அலரி
☞12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இரு எம்.பிக்களும், ஜே.வி.பியின் 3 எம்.பிகளும் நீங்கலாக மிகுதி 220 எம்.பிக்களினதும், அவர்களினது கட்சிகள் அல்லது குழுக்களினதும் ஆதரவு ரணிலின் அரசுக்கு இருப்பதாகவே தெரிகின்றது. 'இந்த அரசை இப்போதைக்கு நாம் வீழ்த்தப் போவதில்லை. நாட்டின் பொருளாதார மீட்சிக்கு அவரது அரசு எடுக்கக்கூடிய நல்ல முயற்சிகளுக்கு எல்லாம் நாம் ஆதரவு தருவோம்' என உறுதி அளித்து நிற்கின்றன அக்கட்சிகள்.

அரசு அமைத்த பின்னர் முதல் நாள் நாடாளுமன்றத்தைச் சந்திக்கப்போகும் ஒரு பிரதமர் இப்படி 220 எம்.பிக்களின் எதிர்ப்பு இல்லாத ஆதரவு பெற்றிருப்பது இதுவே முதல் தடவை.

ரணில் அரசு அமைத்த போது, பெரும்பான்மையை உறுதிப்படுத்தும் பிரேரணையொன்றை அவர் நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்காது, ஏனெனில் எந்த கட்சியும் நாடாளுமன்றத்தில் அவரது அரசின் பெரும்பான்மையை இப்போதைக்குச் சவாலுக்கு உட்படுத்தாது என்று குறிப்பிட்டிருந்தேன். அது சரியாகி வருகின்றது.

ரணிலின் பரம வைரிக் கட்சியாக உருவெடுத்திருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூட அவரது அரசுக்குப் பெரும்பான்மை உள்ளதா என்பதை சவாலுக்கு உட்படுத்தாது என்பதுதான் நிலைமை. அதனை அறிக்கை வெளியிட்டு பகிரங்கமாக உறுதிப்படுத்தும் நிலையில்தான் எல்லா கட்சிகளும் உள்ளன. - பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட.

அதற்கு காரணம் உண்டு. சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

நேற்று சுமந்திரன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), ரவூப் ஹக்கீம் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்), மனோ கணேசன் (தமிழ் முற்போக்குக் கூட்டணி) மூவரும் பிற்பகல் 3.30 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விரிவாகப் பேசினர். அது போலவே மொட்டுக் கூட்டணியிலிருந்து வெளியேறி, தனித்து இயங்கும் 10 கட்சிகள் அணி, சுயாதீனமாகச் செயற்படும் நான்கு அணிகள், சுதந்திர கட்சி எல்லாம் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசுகின்றன அல்லது அவரது அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவைத் தருவதாக அறிக்கைகள், கடிதங்கள் மூலம் அறிவிக்கின்றன.

தத்தமது கட்சிகளின் ஆதரவைக் கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் எழுதினார். அதற்கு தாங்கள் இப்படிப் பிரதிபலிப்பு காட்டுகின்றார்கள் என்றுதான் அக்கட்சியினர் நியாயம் - காரணம் - கூறுகின்றனர். ஆனால், அதுவல்ல உண்மைக் காரணம். 'நாங்கள் உங்கள் ஆட்சியைக் குழப்ப மாட்டோம். எதிர்க்க மாட்டோம். தேவைப்படும் சமயத்தில் ஆதரவும் தருவோம். அதற்குக் கைமாறாக எங்கள் கட்சியில் இருந்து - அணியிலிருந்து - யாரையும் அமைச்சர் பதவி ஆசை காட்டி, பிரித்து எடுத்து, உங்கள் பக்கம் வளைத்துப் போட முயலாதீர்கள். எங்கள் கட்சியைக் கட்டுக்கோப்பாக இருக்க விடுங்கள்' - என்பதுதான் அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

எல்லோருக்கும் ரணில் உறுதியளித்திருக்கிறார். "அரசைத் தக்க வைக்கத் தேவையான நாடாளுமன்ற அட்சரகணித எண்ணிக்கையைத் தேடி அலையும் நிலையில் நான் இல்லை. இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு என் பங்களிப்பை முழுமையாக வழங்கவே நான் வந்தேன். எனது அரசுக்குப் போதிய பெரும்பான்மைப் பலம் இல்லை, நீங்கள் வீட்டுக்குப் போங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து கூறினால், நான் அடுத்த நிமிடமே வெளியேறி விடுவேன். எனவே உங்கள் கட்சிக்காரர்கள் அல்லது அணியினர் எவரையும் தேடிப்பிடித்து நானாக வளைத்துப் போட முயற்சிக்க மாட்டேன். அதற்கான தேவைப்பாடும் எனக்குக் கிடையாது. அவர்களாக வந்து கேட்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்" - என்று தெளிவுபட உறுதி கூறிவிட்டாராம் ரணில்.

ஆக, தங்கள் கட்சியில் இருந்து அரசுப் பக்கம் குத்துக்கரணங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கக் கூடாது என்ற நிபந்தனையை மனதில் வைத்துத்தான் ரணிலுக்கு இவ்வளவு ஆதரவு.

ரணிலும் ஒற்றை இலக்கத்தில் இருக்கும் தான் எஞ்சிய 112 பேரைத் தேடி வேட்டை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்பதால் யாரையும் அவர் தேடி வளைத்துப் போட முயலமாட்டார் என்றும் கூறப்பட்டது.

★ ★ ★

தமது அரசுக்கு ஆதரவு தாருங்கள் என்று எல்லா கட்சிகளுக்கும் கடிதம் அனுப்பிய ரணில் தமிழ்க் கூட்டமைப்பை விட்டு விட்டாரா என்ற ஒரு கேள்வி எழுந்தது. தேடிப்பார்த்தேன். அவர் தவற விடவில்லை. சம்பந்தனுக்கும் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதைப் பெற்றுப் படித்து விட்டு வாளாவிருந்துவிட்டார் சம்பந்தன்.

இன்று காலை நாடாளுமன்றம் கூட முன்னர் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை சம்பந்தன் கூட்டியுள்ளார். நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்குக் கூட உள்ளது. இந்தக் கூட்டம் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெற உள்ளது.

அந்தக் கூட்டத்தில் ரணிலின் கடிதத்தைச் சமர்ப்பித்து ஒரு முடிவெடுக்க சம்பந்தன் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது.

இதேசமயம் இன்று நாடாளுமன்றம் கூடும் போது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதில் கட்டாயம் கலந்து கொள்வார் என்று அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் நாடாளுமன்றத்திற்கு வாகனத்தில் - தரை வழியாக - வருவார் என்றும், அதன் பின்னர் கொழும்பு விஜயராம வீதி இல்லத்தில் அவர் தங்கி இருந்து பல்வேறு தரப்பினரையும் சந்திப்பார் என்றும் கூறப்பட்டது. பத்திரிகையாளர்களையும் - தனித்தனி கொஞ்சக் கொஞ்சப் பேராக - அழைத்து அவர் சந்திப்பார் என கூறப்பட்டது. எனக்கும் அவரிடம் சில கேள்விகள் உள்ளன. சந்தித்தால் கேட்பேன். பதிலை வாசகர்களோடு பகிர்வேன்.

★ ★ ★

இதற்கிடையில் -

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ தாம் புதிய அரசில் இணைந்து அமைச்சர் பதவியை ஏற்கப் போகின்றார் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

"சஜித் பிரேமதாஸ தான் இந்த நாட்டின் அடுத்த தலைவர். அதில் சந்தேகமில்லை. ஆனால் நாடு இன்று இருக்கும் நிலையில் அதைக் காப்பதற்காக அரசியலுக்கு அப்பால் சென்று புதிய அரசை அமைப்பது காலத்தின் கட்டாயம். எங்கள் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது முக்கியமானது" என்றார் அவர்.

தமது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க போன்றவர்கள் நாட்டின் நலன் கருதி இந்த அரசில் இணைய வேண்டும். அது தவிர்க்க முடியாத கட்டாயம் என்று அவர் கூறியிருக்கிறார்.

"நாங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குப் போக வேண்டும் என்பது உட்பட ஏழு விடயங்களை உள்ளடக்கிப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறோம். அதற்கான பதில் கிடைத்ததும் நாங்கள் அரசில் இணைய வேண்டும் என்பதுதான் எனது கருத்து. இந்த விடயத்தில் நான் தனி ஒருவனாக இல்லை. கோட்டாவை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து புதிய அரசை பயன்படுத்த வேண்டும்" - என்று அவர் கூறியிருக்கிறார். ஆக, சஜித்தின் கட்சியில் முதலாவது பிளவு உறுதியாகி இருக்கின்றது.

ஹரீன் பெனாண்டோ இவ்விடயத்தில் தாம் தனியாள் இல்லை என்று கூறியிருக்கிறார். ஆகவே மேலும் பலர் இப்பிளவில் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது.

அமைச்சரவை விரிவாக்கம் அடுத்து வரும் நாள்களில் இல்லை என்று தகவல்கள் கூறுகின்றன. தேவையான தரப்புகளை எல்லாம் தம் கைகளில் எடுத்து உறுதிப்படுத்திக்கொண்டு, இரண்டு, மூன்று நாள்களின் பின்னர் ஒரேடியாக அதிர்ச்சி தரும் விதத்தில் அமைச்சரவையை ரணில் விரிவு படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

– மின்னல் –

# புலிச் சின்னங்கள் இல்லாமல் நினைவேந்தலுக்கு அனுமதி

## ரவிகரனிடம் பொலிஸார் தெரிவிப்பு

(சண்முகம் தவசீலன்)

முள்ளிவாய்க்கால், மே - 18 நினைவேந்தல் நிகழ்வுதொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடமும், கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ. மயூரனிடமும் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் மே-18 நினைவேந்தலின்போது விடுதலைப்புலிகளின் சின்னங்கள் எவையும் பயன்படுத்தக் கூடாதுஎனபொலிஸாரால் இந்தவிசாரணையின்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விசாரணைகளின் பின்னர் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற்கொள்வதற்குப் பிரதமர் கூட மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும், அதேபோல்தாமும் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எவ்வித இடயூறுகளையும் மேற்கொள்ளமாட்டார்கள் என்றும் பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடத்தி முடிக்கவேண்டும் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக இந்த நினைவேந்தல் நிகழ்விலே விடுதலைப் புலிகளின் சின்னங்கள் பயன்படுத்தப் படாமல் நினைவேந்தல் நிகழ்வை நடாத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது - என்றார்







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலுக்கு வாய்ப்பான நிலைமை

புதிய பிரதமராகப் பதவியேற்ற பின்னர் இன்றுதான் முதல் தடவையாக நாடாளுமன்றத்தைச் சந்திக்கவிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அவரது அரசு கவிழும் ஆபத்து ஏதும் அவருக்கு இல்லை. அவரது அரசை உடனடியாகக் கவிழ்க்கும் யோசனைகளோ, திட்டங்களோ எந்தத் தரப்புக்கும் இல்லை.

ஆகவே, தமது அரசைக் காப்பாற்றும் சிந்தனைகள், கவலைகள் ஏதுமின்றியே சுதந்திரமாக, சுயாதீனமாக செயலாற்றும் சூழல் பிரதமர் ரணிலுக்குக் கிடைத்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடிகளைக் கையாள்வதற்கான தனது திட்டங்களை அரசியல் கட்டுப்படுத்தல்களோ, மட்டுப்படுத்தல்களோ, அரசியல் சிக்கல்களோ இன்றி முன்னெடுக்கக் கூடிய ஒரு களச் சூழல் அவருக்கு வாய்த்திருக்கின்றது.

தனி ஓர் எம்.பியைக் கொண்ட ஒரு தரப்பாக அவர் களத்தில் இறங்கியிருக்கின்றமைதான் அவருக்கு இந்த அரிய வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – சூழ்நிலையை – தந்திருக்கின்றது எனலாம்.

இதையே இருபத்தியைந்துக்குக் குறையாத எம். பிக்களைக் கொண்ட ஓர் அணியின் அல்லது ஒரு கட்சியின் தலைவராக இந்தப் பிரதமர் பதவியை அவர் ஏற்றிருப்பாராயின் அவரின் கதை கந்தலாகியிருக்கும். பல்வேறு கட்சிகளினதும் அணிகளினதும் கால் வாரல்கள், இழுத்து வீழ்த்தல்கள் என்று பல நெருக்கடிகளை அவர் சந்திக்க வேண்டியிருந்திருக்கும்.

நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அடுத்த ஓரிரு மாதங்கள் இன்னும் மோசமான கஷ்டங்கள் இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார். காஜானாவைக் காலியாக்கி விட்டுச் சென்றிருக்கின்றார்கள், நிலைமையை சுமுகமாக்கி, வழமை நிலைக்குத் திருப்புவதற்கு தனக்கு இன்னும் ஓரிரு மாதங்கள் தேவை என்று பிரதமர் கோரியிருக்கின்றார்.

நியாயமான – புரிந்து கொள்ளக் கூடிய – வேண்டுகோள்தான்.

எனினும், இவ்வளவு தூரம் காஜானாவைக் காலியாக்கி, பொருளாதாரத்தைச் சீரழித்தமை இயல்பாக நடந்த விடயம் அல்ல என்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடத்தி, விரிவான விசாரணைகள் நடத்தி, உண்மையைக் கண்டறிய வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் என்பது அவரது திட்டமாக இருக்கின்றது என்பதும் தெரிய வருகின்றது.

அதனை, தனி ஒரு சிப்பாயாக – One Man Army யாக – களத்தில் இறங்கியிருக்கும் அவரால் ஒப்பேற்ற முடியுமா என்பதே கேள்வி. தற்போதைய அரசியல் கட்டமைப்பு அத்தகைய உண்மைகளை அவர் தேடிக் கண்டறிய அவரை அனுமதிக்குமா என்பதே வினா.

இப்போதைய அரசை ரணில் கொண்டு செல்வதில் அவருக்கு வேறு அரசியல் சுமைகள், கஷ்டங்கள், இக்கட்டுகள், இழுபறிகள் இல்லை. மடியில் கனமில்லை. அதனால் வழியில் பயமும் இல்லை.

யார் சேர்ந்து வந்தாலும் வாருங்கள், வராவிட்டாலும் விடுங்கள், இந்த நெருக்கடி நிலையில் நான் என் பாட்டில் அரசைக் கொண்டு போவேன், யாரும் அதை விழுத்துவாரகள் என்றோ, அதைச் தடுப்பார்கள் என்றோ நான் கவலைப்பட மாட்டேன் என்பதே பிரதமர் ரணிலின் நிலைப்பாடு.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கூறியபடி 'ரணில் தோற்றால், நாடு தோற்றதாகி விடும்' என்ற கருத்து நிலைதான் ரணிலுக்கு இன்றுள்ள வாய்ப்பான – சாதகமான – நிலைமை.

## உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் கலந்துரையாடல்



சுகாதாரம், உணவு மற்றும் உரம் ஆகிய துறைகளில் மேலதிக உதவிகளை வழங்குவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் பிரதிநிதிகளுடன் மருந்துகள், உணவு மற்றும் உரம் வழங்குவதற்கான ஆதரவு தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை, அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் நாளை கலந்துரையாடப்படும்எனவும், பின்னர் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமது டுவிட்டர் பதிவொன்றிலோ பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## இந்த வெசாக்குக்கும் ரஞ்சன் விடுதலைசெய்யப்படாதமை துரதிர்ஷ்டவசமான ஒன்று என சஜித் கடும் வேதனை

கொழும்பு, மே 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வெசாக் விடுமுறை தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படாமை துரதிர்ஷ்டவசமான நிலை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட சென்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

ரஞ்சன் ராமநாயக்க ஒரு திருடனோ அல்லது ஒரு மோசடிக்காரனோ அல்லன். அவர் ஒரு மனிதாபிமானி. வெசாக் விடுமுறை தினத்தை முன்னிட்டு 240 இற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்



என்றாலும் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படவில்லை.இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை.

திருடனோ,மோசடிக்காரனோ அல்லாத ரஞ்சன் ராமநாயக்க மனிதாபிமானமுள்ள ஒரு தலைவர். அவருக்கு பூரண சுதந்திரம் கிடைக்கும் முகமாக தான் போராடுகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் அமைப்பு



மட்டக்களப்பில் வழமைபோல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளை (புதன்கிழமை) மு.ப. 9 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி பிரதான வீதி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இடம்பெறும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'முள்ளிவாய்க்காலில் கடந்த 13 வருடங்களுக்கு முன்பு இனப்படுகொலை செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்களை நினைவு கூர்வது எமது உரிமை.

கடந்த 2019ஆம் ஆண்டு முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவு நாளை பல அச்சுறுத்தல் மத்தியில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர்ஆலயத்திலும் நடத்தினோம்.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. – எனவும் தெரிவித்துள்ளார்.

## பிரதி சபாநாயகருக்கு பெண் சிபாரிசு; 'கபே' அமைப்பு வரவேற்றுள்ளது!

பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் ஒருவரின் பெயர் பரிந்துரை செய்யப்படவுள்ளமை சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் வலுப்பெறும் என அந்த அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

6ஆவது நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களுடன் ஒப்பிடுகையில் 7 ஆவது நாடாளுமன்றத்தில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 சதவீதம் குறைவாகவே காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிடமாகவுள்ள பிரதி சபாநாயகர் பதவிக்கு ரோஹினி கவிரத்னவின் பெயரை பரிந்துரை செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அத்துடன், பிரதி சபாநாயகர் பதவிக்கு அஜித் ராஜபக்ஷவின் பெயரை பரிந்துரை செய்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.


நாடாளுமன்றகுழுகூட்டத்தில் இதுகுறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதிசபாநாயகரைதெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு இன்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

பிரதி சபாநாயகருக்கான தேர்வின்போது, ரோஹினி கவிரத்னவை ஆதரிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட 11 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போராட்டத்தை மழுங்கடிக்க இந்துப்பத்திரிகை உடந்தை!

## செல்வம் எம்.பி. காட்டம்



அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை மழுங்கடிக்கவே புலிகள் மீளுருவாக்கம் என்ற விடயம் பேசப்படுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளதுடன் மே18 நிகழ்வை சிங்கள மக்களும் அனுஷ்டிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற ரெலோ அமைப்பின் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் கிறிஸ்ரி குகராஜாவின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'வவுனியாவில் சிங்களதேசத்தின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்திய மகானை இன்றையதினம் நாம் நினைவு கூருகின்றோம்.

முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் பாரிய அல்லல் பட்டனர். மஹிந்த கோட்டாபய அரசு அந்த மக்கள் மீது மோசமான வன்முறையைச் செய்து காட்டியது. அந்த வலிகளை இந்த மாதத்தில் நாம் நினைவுகூருகின்றோம்.

இதே காலப்பகுதியில் சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப்படும் நிலை கோட்டா அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டைக் கொண்டு நடத்தும் திறமை அவர்களிடம் இருக்கவில்லை என்பது இன்று புலனாகின்றது.

சிங்கள மக்களின் அந்த செயற்பாட்டில் நாங்களும் இணைந்து கொள்கின்றோம்.

அத்துடன் இழந்துபோன தமது உறவுகளுக்காக அஞ்சலி செய்யும் வாய்ப்பை எந்த ஒரு தடைகளும் இல்லாமல் புதிய பிரதமர் ஏற்படுத்தித் தரவேண்டும். இந்த நிகழ்வில் சிங்கள மக்களும் கலந்து கொள்ள வேண்டும். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

உயிரிழந்த எமது மக்களுக்கு அவர்களும் அஞ்சலியை செலுத்தவேண்டும்.

இதேவேளை புலிகளின் மீளுருவாக்கம் என்ற போர்வையில் இந்த போராட்டத்தை மழுங்கடிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று முன்னரே சொல்லியிருந்தேன்.

தற்போது இந்துப்பத்திரிகையில் சொல்லப்பட்டுள்ள விடயம் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதது. மக்கள் துக்கத்தை அனுபவித்து வரும் இந்த சூழலில் இப்படியான செய்திகள் வருவதை ஏற்கமுடியாது. இது எமது மக்களின் அஞ்சலியைத் தடைசெய்வதற்கான உக்தியாகவே பார்க்கின்றேன்.

அத்துடன் புதிய பிரதமருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் நிதானமாக தனது கருத்தை சொல்லியிருக்க வேண்டும் என்பது எனது கருத்து. முதலமைச்சராக இருந்தவர் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்றவர் உடனடியாக அப்படியான கருத்தை ஏன் சொன்னார் என்று தெரியவில்லை அவர் நிதானமாக கருத்தை சொல்லியிருக்கலாம்.

இந்த சூழலில் நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து முடிவை எடுக்கும் சந்தர்ப்பம் தொடர்பாக நாம் பரிசீலிக்க வேண்டும்' என மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டு. வைத்தியசாலையில் திருட்டில் ஈடுபட்ட இளைஞருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் கையடக்க தொலைபேசி மற்றும் பணப்பை என்பவற்றை திருடிய சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வைத்தியசாலையில் 22 ஆவது விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் இருவரின் கையடக்க தொலைபேசி இரண்டு திருட்டு போயுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இதனால் அங்கு இரவில் சென்று வந்த இளைஞர் ஒருவர் மீது சந்தேகம் கொண்டு அது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் குறித்த இளைஞனை வெள்ளிக்கிழமை கைது செய்து மட்டு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த இளைஞன் ஏறாவூர் தக்காநகர் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

உறவினர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர் எனவும் அவர்களுக்கு உதவிக்கு இரவில் நிற்க வேண்டும் எனத் தெரிவித்து வைத்திய சாலைக்குள் உட்சென்று அங்கு விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுடைய கைதொலைபேசிகள், கைபை என்பவற்றை திருடி வந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து திருடப்பட்ட 2 கையடக்கத் தொலைபேசிகள், தேசிய அடையாள அட்டை இரண்டு, வங்கியில் பணம் பெறும் ஏ.டி.எம். இயந்திர அட்டை 9, இரண்டு சாரதி அனுமதிப்பத்திரம், 3 ஆயிரத்து 900 ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும், குறித்த சந்தேகநபரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கூளாவடி, றொசாறியே வீதியில் எரிவாயு கொள்கலன், சைக்கிள்களை திருடிவந்த இரண்டு பேரை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கூளாவடி பிரதேசத்திலுள்ள கடை ஒன்றின் முன்னால் இருந்த எரிவாயு கொள்கலன் ஒன்று கடந்த 5 ஆம் திகதி திருட்டுப் போயிருந்தது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமராவின் காட்சிபதிவுகளின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் எரிவாயு கொள்கலன் ஒன்றை திருடிச் சென்ற நெல்லிக்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரை கைது செய்ததுடன் திருடப்பட்ட எரிவாயு சிலிண்டர் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டர் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை றொசாறியே வீதியில் கடந்த 13 ஆம் திகதி சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவத்தில் ஏறாவூர் லங்காமாத வீதியைச் சேர்ந்த 61 வயதுடைய ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 4 சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

இதன்போது மீட்கப்பட்ட சைக்கிள்களில் இரண்டு சைக்கிள்களின் உரிமையாளர்கள் அதனை அடையாளம் காட்டியுள்ளனர் எனவும் இரண்டு சைக்கிள்கள் அடையாளம் காணப்படாமல் உள்ளன.

எனவே சைக்கிள் திருட்டுப்போனவர்கள் பொலிஸ் நிலையம் சென்று அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவ்விரு திருட்டுச் சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ராஜபக்ஷர்களை காப்பாற்றும் ரணில்!




இனப்படுகொலையாளிகளான ராஜபக்ஷர்களை காப்பாற்றும் ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்த வேண்டியதேவைதமிழ்த்தேசியமக்கள்முன்னணிக்குக் கிடையாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அமைச்சுப் பதவியென்ற பேச்சுக்கே இடமில்லை. இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்களால் தமிழினத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணை கோரும் இந்தத் தருணத்தில் அமைச்சரவையில் அங்கம் வகித்தோ அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அரசைக் காப்பாற்றும் குழுக்களுக்குத் தலைமை தாங்கியோ அரசாங்கத்தோடு சங்கமிப்பதென்பது ஈழத் தமிழினத்தின் நீதிக்கான பயணத்தை நீர்த்துப்போகச் செய்வதோடு இனப்படுகொலையாளிகளைப் பாதுகாப்பதாகவே அது அமையும்.

இந்தத் துரோகங்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் செய்யாதென்பதை இனவிடுதலைக்காக இறந்தவர்களின் ஆத்மாக்களை மனதிருத்தி பொறுப்போடுகூறுகின்றோம். – எனத்தெரிவித்துள்ளார்.

# இராணுவ பாதுகாப்பை ஏற்க மறுத்தார் மனோ!

நாட்டில் இராணுவ ஆட்சி இடம்பெறுகிறதா என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தனது முகநூல் பதிவொன்றின் ஊடாகவே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

'திம்பிரிகஸ்யாய இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் எனது பாதுகாப்புக்காக' என்று கூறி, எனது ஸ்ரீமகாவிஹார வீதி வீட்டுக்கு வந்தார்கள்.

வழமையான மந்திரி பாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மேலதிகமாக மூவர் வந்தார்கள். இருதரப்பையும் 'நன்றி தம்பிகளா, வேண்டாம்' என திருப்பி அனுப்பி விட்டேன்.

'2005 – 2009, கொழும்பில் வெள்ளை வான் கடத்தல், படுகொலை நெருக்கடி காலத்தியிலேயே என் இதே வீட்டில் இப்படியே தான் இருந்தேன். இனியென்ன, இப்படியே இருக்கும்வரை இருப்போம்.' – என அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் மோசமான நிலைமை உலக தரப்படுத்தலில் பாரிய வீழ்ச்சி

உலகின் இரண்டாவது அதிக பணவீக்கம் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளதாக, ஜோன்ஸ் ஹொப் கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்டீபன் ஹெங்க் வழங்கிய இந்த வார பணவீக்க அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் சிம்பாப்வே மட்டுமே இலங்கைக்கு மேலே உள்ளது. லெபனான், சூடான், ஆப்கானிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளை தாண்டி இலங்கை பணவீக்கம் சாதனை அளவில் உயர்ந்துள்ளது என்பதை பேராசிரியரின் அட்டவணை காட்டுகிறது. இந்த வார பணவீக்க அட்டவணையில், இலங்கை மீண்டும் ஒருமுறை தீவிரமான ஆய்வுக்கு உள்ளாகியுள்ளது, பணவீக்கம் 132 சதவீதமாக உள்ளது என பேராசிரியர் ஸ்டீவன் ஹெங்க் சுட்டிக்காட்டியுள்ளார்.

1884 முதல் 1950 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இலங்கை நாணயச் சபையொன்றை நியமித்தது. அவ்வாறான நடவடிக்கை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி தற்போது கவனம் செலுத்த வேண்டும் என்பது தொடர்பாகவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவதை பாருங்கள். இலங்கை மக்களுக்கு கிடைத்தவை போதும். ராஜபக்ஷர்கள் செல்ல வேண்டிய நேரம் இது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லசந்தவின் கொலைக்கான காரணம் மிக் கொள்வனவே!

## இலங்கையின் முன்னாள் பொலிஸ் அதிகாரி சாட்சியம்





லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு தொடர்பில் தாம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், தசண்டே லீடர் செய்தித்தாளில் வெளியான மிக் உடன்படிக்கை தொடர்பான தகவல்களே, அவரது கொலைக்கான முக்கிய நோக்கத்தை உருவாக்கியிருக்கலாம் என்று தாம் நம்புகிறேன் என இலங்கையின் முன்னாள் பொலிஸ் அதிகாரி நிஷாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இவர், 2019 இல் கோட்டாபயவின் ஆட்சி வந்தவுடன் சுவிட்ஸர்லாந்துக்கு தப்பிச் சென்றவராவார்.

இந்தநிலையில் நெதர்லாந்து ஹேக்கில் கடந்த 12ஆம் திகதியன்று சர்வதேச பத்திரிகை சுதந்திர அமைப்புகளின் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் நடைபெற்ற லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயத்தில் அவர் சாட்சியம் அளித்தார்.

இதன்போது லசந்தவின் கொலையாளிகள் பயன்படுத்திய கைத்தொலைபேசிகளின் கோபுரப் பதிவுகள் மூலம் அடையாளம் காணப்பட்டன என நிஷாந்த சில்வா குறிப்பிட்டார். விக்கிரமதுங்கவுடன் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் மற்றும்சாட்சிகளின்சாட்சியங்களும்இந்தவிசாரணையின்போது பதிவு செய்யப்பட்டன.

அவர்கள் இலங்கையில் ஊடகவியலாளர்கள் தமது பணிகளை மேற்கொள்வதில் எதிர்கொள்ளும் பல தடைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

முக்கிய சாட்சிகளான சந்தியா எக்னெலிகொட, பாஷான அபேவர்தன, தில்ருக்ஷி ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பரிசோதகர் நிஷாந்த சில்வா ஆகியோரிடமிருந்து சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

2010 ஜனவரியில் காணாமல் போன கேலிச்சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, அந்த நேரத்தில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை மற்றும் தமது கணவர் காணாமல் போனதற்கு காரணமான நிகழ்வுகளை விரிவாக விளக்கினார்.

தனது மொட்டையடிக்கப்பட்ட தலை மற்றும் கறுப்பு உடையைப் பற்றி குறிப்பிடுகையில், இரண்டு ஆண் குழந்தைகளின் தாயான தனது கணவரின் வழக்கு தீர்க்கப்படும்வரைமீண்டும்தலைமுடியை வளர்க்கவோ அல்லது கறுப்பு நிறத்தைத் தவிர வேறு எதையும் அணியவோ கூடாது என்ற முடிவை எடுத்துள்ளேன் என குறிப்பிட்டார். 2006 ஆம் ஆண்டு நாட்டைவிட்டுவெளியேறியஊடகவியலாளரான பிரபான அபேவர்தன, புலம்பெயர்ந்து வாழும் ஊடகவியலாளர், குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் 2005 ஆம் ஆண்டின் கொடூரமான காலத்தில் என்னென்ன துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதை விரிவாக விளக்கினார்.

விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படும் வரையில் அவருடன் பணியாற்றிய ஊடகவியலாளர் தில்ருக்ஷி ஹந்துன்நெத்தி, மிக் விமான ஒப்பந்தம் தொடர்பில் செய்தி அறையில் தமது ஆசிரியருடன் பணிபுரிந்த நினைவுகள் தொடர்பில் விளக்கினார். இதேவேளை விசாரணையில் சாட்சியமளித்த லசந்த விக்கிரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்கவின் சார்பில் முன்னிலையான மனித உரிமைகள் சட்டத்தரணி நுஷின் சர்க்கரட்டி, லசந்தவின் மகள் சார்பில் வாசிக்கப்பட்ட வாக்குமூலத்துடன் விசாரணையை ஆரம்பித்தார். ராஜபக்ஷவின் தவறான ஆட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் பல வருடங்களாக துன்பங்களை அனுபவித்து வந்த மக்கள் ஒரே கடுமையான குரலில் எழுந்து, இந்த தவறான தலைவர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேறுமாறு கோருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

## 50 ஆயிரம் யூரோக்களுடன் பெபிலியானவில் ஒருவர் கைது

உண்டியல் முறைமைக்கு சட்டவிரோதமான முறையில் பணம் கடத்துவதற்காக வெளிநாட்டு நாணயங்களை வைத்திருந்த நபர் ஒருவர் பெபிலியான பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் 50 ஆயிரம் யூரோ பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளையில் வசிக்கும் 53 வயதுடைய சந்தேக நபர், பண மோசடி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 80 லட்சத்து 69 ஆயிரம் இலங்கை ரூபாவாகும் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக அவர் கிருலப்பனை சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு நாணய தட்டுப்பாட்டுக்கு காரணமான உண்டியல் முறை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்று வருவதாகவும், இது தொடர்பாக நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினர் சோதனைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னாரில் வியாபார குறியீடு இல்லாமல் பசளையை ஏற்றிச்சென்ற இருவர் கைது

மன்னாரில் இருந்து ஏறாவூர் பகுதிக்கு வியாபார குறியீடு இல்லாமல் எமோனியம் சல்பைட் என்றழைக்கப்படும் பசளையை ஏற்றிச்சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திருகோணமலை – ஹொரவப்பொத்தானை பிரதான வீதி – ரொட்டவெள பொலிஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஹொரவப்பொத்தானை–இஹல அங்குநொச்சி பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 40 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## இலங்கைக்கு முதல் கட்டமாக தமிழகத்திலிருந்து மருந்துகள்!

இலங்கைக்கு முதல்கட்டமாக அனுப்பத் திட்டமிட்டுள்ள அத்தியாவசிய மருந்துகளை தமிழக அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஞாயிற்றுக்கிழமை, சென்னையில் உள்ள மருந்துக்களஞ்சியத்தில் வைத்து ஆய்வு செய்துள்ளார்.

28 கோடி ரூபா மதிப்பிலான மருந்துகளை, நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அனுப்பி வைக்க தமிழக அரசாங்கம், கடந்த மாதம் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது.

மொத்தம் 137 வகையான மருந்துகள் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளன. இதில், முதல் கட்டமாக ரூ.8.87 கோடி மதிப்பிலான 55 மருந்துகளை தேர்வு செய்துள்ளதாக அமைச்சர் சுப் ரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இலங்கையின் எந்தப் பகுதிக்கு பொருள்களை அனுப்புவது என்பதை மத்திய அரசாங்கமே முடிவு செய்யும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை மாநிலத்தில் மூன்று மாதங்களுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் இருப்பு உள்ளன எனவும், மொத்தம் 240 கோடி ரூபா மதிப்புள்ள மருந்துகள் 32 களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

சென்னையில் புதிய மருந்துக் களஞ்சியம் 35 ஆயிரம் சதுர அடியில் 2 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

இது மாநிலத்தின் மிகப்பெரிய மருந்துக் களஞ்சியமாகும் என்றும் அமைச்சர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

# ‘கோட்டா கோ கம’ மீது தாக்குதல் நடத்தியோரை கைதுசெய்ய முடியாதமைக்கு காரணமென்ன?

## பொலிஸ்மா அதிபருக்கு ருவான் கடிதம்



‘கோட்டா கோ கம’ போராட்டம் மீதான தாக்குதல்களை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர்களை இதுவரையில் கைது செய்ய முடியாமல் போயுள்ளமைக்கான காரணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அறியத்தருமாறு கோரி ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்னவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்து , அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ருவன் விஜேவர்தன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டார்.

அதற்கமையவே ருவன் விஜேவர்தன இவ்வாறு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

‘கோட்டா கோ கம’ மற்றும் ‘மைனா கோ கம’ ஆர்ப்பாட்டத்தின் மீது கடந்த 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வன்முறைகளின் காரணமாக அரச மற்றும் தனியார் சொத்துக்கள் பலவற்றுக்கு சேதம் விழைவிக்கப்பட்டதோடு , நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கலாக 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்று உங்களால் நியமிக்கப்பட்டது. அதே போன்று உரிய விசாரணைகளை முன்னெடுத்து தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்காக வருகை தந்தவர்களோ அல்லது தாக்குதல்களை மேற்கொண்டவர்களோ இதுவரையில் கைது செய்யப்படவில்லை. அன்றைய வன்முறைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு கோட்டைநீதிமன்றத்தில்தனிப்பட்ட முறைப்பாடொன்றும் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை கைது செய்யாமல், தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்ட வன்முறைகளுடன் தொடர்புடைய நபர்கள் மாத்திரம் கைது செய்யப்பட்டுள்ளமை நியாயமற்றதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிராயுதபாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது கூட அண்மையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவம் இடம்பெற்ற சில மணித்தியாலங்களுக்குள் அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதோடு , இது தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை மதிக்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான பின்னணியில் நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்களில் பிரதான சந்தேகநபரை பொலிஸாரால் கைது செய்ய முடியாமல் போயுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். பொது மக்களும் இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் உள்ளனர்.

கோட்டாகம ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் வழங்கியுள்ளார்.

எனவே இந்தப் போராட்டம் மீதான தாக்குதல்களை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர்களை இதுவரையில் கைது செய்ய முடியாமல் போயுள்ளமைக்கான காரணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டொலரின் சரிவால் தங்கத்தின் பெறுமதியும் குறையும் வாய்ப்பு?

*அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் பணவீக்க விகிதம் வரலாறு காணாத அளவு உச்சம் தொட்டு வரும் நிலையில் தங்க விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கணித்துள்ளனர்.*

*கடந்த சில வாரங்களாக தங்கம் விலை அவ்வப்போது ஏற்றம் கண்டாலும், மொத்தமாக பார்க்கும்போது சரிவில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.*

*இவை தங்கம் வாங்க காத்திருப்போருக்கு சரியான வாய்ப்பாக அமையலாம் எனவும் நிபுணர்கள் கணித்துள்ளனர்.*

*இதேவேளை, குறுகிய காலத்தில், சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை ஒரு அவுன்ஸ் 1,780 டொலராகவும், மெக்ஸ் தங்கத்தின் விலை 10 கிராம் அளவுகளுக்கு 48,800 ரூபாவாகவும் சரிவடைய அதிகளவிலான வாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளனர்.*

## வன்முறைகளில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 15 இற்கும் அதிகமானோர் திருமலையில் கைது

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டனர் என சந்தேகத்தின் பேரில் 15 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலைகந்தளாய்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலேயே இவ்வாறு கைதுகள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கைதானவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்து சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான ரொஷான் அக்மீமன –

‘திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அதுக்கோரளவின் வீடு சேதமாக்கப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு பொலிஸாரால் வரவழைக்கப்படும் இளைஞர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலையில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் எனவும் இவ்வாறான கைதுகள் அரசின் சர்வாதிகாரத்தை வெளி காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் ஜனநாயகமான ஆட்சி ஒன்று அமைய வேண்டும் என இளைஞர், யுவதிகள் வீதிக்கு இறங்கி இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கும் இவ்வேளையில் இவ்வாறான கைதுகளை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கை வைத்து தற்போது கடலின் நடுவில் ஒரு தீவில் மறைந்து இருக்கிறார் எனவும் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் இவ்வாறு சட்டவிரோத அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் இல்லாவிடின் இவர்கள் இருவரும் ஆளுக்கு ஒவ்வொரு தீவுகளில் மறைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கலவரங்களுக்கு காரணமானவர்களை பாரபட்சமின்றி கைது செய்ய வேண்டும்!

## கிழக்கு மக்கள் குரல்களின் அமைப்பு கோரிக்கை

நாட்டில் இடம்பெற்றுள்ள பல ஊழல் மற்றும் கலவரங்களுக்கு சூத்திரதாரிகளான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் அமைச்சர்கள், மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் உட்பட அனைவரும் பாரபட்சமின்றி கைது செய்யப்பட வேண்டும் என கிழக்கு மக்கள் குரல்களின் அமைப்பின் அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மக்களின் குரல் அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

‘ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் உருவான அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பல அரசியல்வாதிகளின் ஊழல் மிக்க ஆட்சியால் நாடு இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

கடந்த மே மாதம் 09 ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டத்தில் குண்டர்களை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்திய முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர்கள், மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற வன்முறைக்கு மூல காரணமானவர்கள். அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்படவேண்டும். எனவே அனைவரையும் பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என கிழக்கு மக்கள் குரலில் அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இவ்வாறான ஊழல் மிக்க ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமல்லாது முன்னாள் அமைச்சர்களை கலவரத்துக்குக் காரணமான குண்டர்களை ஏவி விட்ட அரசியல்வாதிகளை திருகோணமலை கடற்படை முகாமில் மறைத்து வைத்துக்கொணடு ஊழல் வாதிகளையும் வன்முறை காரர்களையும் அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் இந்த அரசாங்கம் நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதில் மும்முரமாக இருப்பதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது எனவும் நாட்டுக்கு டொலர்கள் தேவைப்படுகின்றன.

நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்து டொலர்களை கொள்வனவு செய்யும் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் தற்போது நாட்டின் பெரும்பாலான தீவுகள் வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக வெறுமனே பிரதமரை மாற்றி அமைச்சர்களை மாற்றி மக்களை இன்னமும் இந்த அரசாங்கம் ஏமாற்றிக் கொண்டு இருப்பதை கிழக்கு மக்களின் குரல் சார்பில் வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு மக்களின் குரல்கள் அமைப்பின் அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

# காலிமுகத்திடல் தாக்குதலுக்கு உடன் நிவாரணம் தமிழர்களுக்கு இதுவரை எதுவும் வழங்கவில்லை!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வேதனை



அண்மையில் காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிக்கொண்டிருந்தவர்கள்மீது தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டத்திற்கு எதிராக போராட்டக்காரர்களால் மேற் கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் தொடர்பான மதிப்பீடுக ளையும் நிவாரணங்களையும் அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ள நிலையில், இதுவரை தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடு களோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப் பட்டதா? என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப் பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

இலங்கையில் 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழி சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர் வினையாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபா சொத்துகளை அழித்த துடன் பலநூறு தமிழர்களையும் கொன்று குவித்தது. ஆனால், இன்றுவரை இது தொடர்பான விசாரணை களும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்க வில்லை.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் மக்கள்மீது வன்முறையை ஏவிவிட்டார். இதன்போதும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா சொத்துகள் அழிக் கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல் லப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கான தென்பகுதி வாழ் தமிழர்கள் தமது தாயகமான வடக்கு – கிழக்கிற்கு விரட் டியடிக்கப்பட்டனர். இதுதொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

மீண்டும் 1983 ஆம் ஆண்டும் தமிழர்கள்மீது அரச அனுசரணையுடன் பாரிய ஒரு வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும், வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு தீயூட்டப்பட்டன. இந்த வன்முறை களிலிருந்து தமிழர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ள தனிநாடுகோரி இலங்கைப் படையினருக்கு எதிராக நீண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்தினர். அன்றைய காலகட்டங்களில் வடக்கு – கிழக்கில் பல்லாயிரக்கணக் கான மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு, அவர்களின் குடும்பங்கள் ஏதுமற்ற வர்களாக, எஞ்சியவர்களின் உயிரைக் கையில் பிடித் தபடி நிர்கதியாகி நடுத்தெருவுக்கு வந்தனர்.

இறுதியில், 2009 இல் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் விவசாயி களின் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள், கன ரக வாகனங்கள், இயந்திரங்கள், பஸ்கள், சைக்கிள்கள், என்பன கைவிடப்பட்டு மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் மீண்டு வந்தபொழுது அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உடைமைகள் எதுவும் அவர்க ளுக்குக் கிடைக்கவில்லை.

வடக்கு – கிழக்கில் யுத்தத்தின் பின்னர் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதி யான தங்கமும், வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடி ரூபா பணமும் அரசாங்கத்தால் கபளீகரம் செய் யப்பட்டன. இவை தொடர்பாக அன்றிலிருந்து இன்று வரை எந்தவிதமான விசாரணைகளோ நிவாரணங் களோ எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோத தவறான அணுகுமுறை மற்றும் பொருளாதாரக் கொள்கை காரணமாக நாடு பொருளாதார ரீதியில் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சி யால் கொதித்தெழுந்த தென்பகுதி சிங்கள மக்கள், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை பதவி விலகுமாறு கோரி கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் கோட்டா கோ கம, மஹிந்த கோ கம என்னும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த பாரிய கிளர்ச்சியை அடக்குவதற்காக, அரசாங்கம் தமது கட்சிக் குண்டர் களை அமைதியாகப் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது ஏவிவிட்டு வன்முறையைத் தூண்டியது. இதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில், ஆளும் கட்சியினரின் பல வீடுகள் எரியூட்டப்பட்டதுடன், அவர்களது அலு வலங்களும் வாகனங்களும் தீயிடப்பட்டன.

ஆளும் தரப்பு அமைச்சர்களின் வீடுகளிலிருந்து சட்டவிரோதமாக பதுக்கிவைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான எரிவாயு கொள்கலன்களும், பெற்றோல், டீசல் பரல்களும், நூற்றுக்கணக்கான நெல் மூடைக ளும், உரமூடைகளும், குண்டர் கூட்டத்துக்காக வைக் கப்பட்டிருந்த சாராய போத்தல்களும் பொதுமக்களால் மீட்கப்பட்டன. அது மாத்திரமல்லாமல், மக்களின் போராட்டத்தைக் குழப்புவதற்காக குண்டர் கூட்டத்தை அழைத்து வந்த 48 பஸ்கள் பொதுமக்களால் அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்தக் கலவரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப் பதற்காக அரசாங்கத்தின் பல்வேறுபட்ட புலனாய்வுப் பிரிவுகளும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், பொதுமக்களிடமிருந்தும் இது தொடர்பான தகவல்களைத் தருமாறு கோரிவருகின் றனர். ஒரு நாளில் நடைபெற்ற இந்தக் கலவரத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்து அழிக்கப்பட்டதாக அரசாங்கம் ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது. இதில் சொத்துகளை இழந்த பலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்ற வகையிலும் மேலும் பெரும் பான்மை சிங்கள தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதகதியிலான ஏற்பாடு களைச் செய்ய முன்வந்திருக்கிறது.

மேற்கண்டவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நலன்க ளில் காட்டுகின்ற அக்கறையைத் தமிழ் மக்கள் மீது காட் டுவதில்லை என்பதும், இவ்வளவு அழிவுகளுக்குப் பின் னரும், நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்ற பொருளா தார வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தமிழர்விரோத செயற் பாடே காரணம் என்று தெரிந்த பின்னரும், இலங்கை அரசாங்கம் இன்னமும் தமிழர்விரோத செயற்பாட்டையே உயர்த்திப் பிடிக்கின்றது என்பதும் தமிழ்த் தேசிய இனத்தை தனது கால்களின்கீழ் அடிமைகளாக வைத்தி ருப்பதையே விரும்புகிறது என்பதும் தெளிவாகின்றது.

இந்த நாடு ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்பதையும், பலமொழி, பலகலாசாரங்களையும் பண் பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் இங்கு வாழ்கின் றனர் என்பதையும், அவர்களது உரிமைகள் மதிக் கப்பட்டு அனைவருக்கும் சமநீதி வழங்கப்படவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளாதவரை இந்த நாட்டில் பொருளாதார எழுச்சியும் வராது. இந்த நாட்டிற்கு விமோசனமும் ஏற்படாது. – என்றுள்ளது.

# வடக்கு, கிழக்கில் 1,000 விகாரைகள் அமைப்பதற்கு கூட்டமைப்பு ஆதரவு!

## மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் சுரேஷ் குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கில் 1,000 விகாரைகளை கட்டுவ தற்குக் கண்ணை மூடிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கி இருக்கின்றது என என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்துள் ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 4 ஆம் நாளை நினைவு கூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் நிகழ்வொன்று அம்பாறை – வீரமுனை பகுதியில் உள்ள படுகொலை நினை வுத்தூபி முன்பாக ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வேளை மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது மக்களுக்கு ரணிலின் கடந்த கால நரித் தனமான போக்கு நன்கு தெரியும். அவர் எமது மக்களை மெது மெதுவாக கருவறுப்பார். 6 ஆவது தடவையாக அவர் பிரதமராக வந்திருக்கின்றார் என நான் நினைக்கின்றேன்.

இவரது ஆட்சிக்காலத்தில் எமது மக்களுக்கு மிக மோசமான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. கடந்த நல்லாட்சியிலும் கூட வடக்கு, கிழக்கில் 1,000 விகாரைகளை கட்டுவதற்கு இவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட் டிருந்தார்.

வடக்கு – கிழக்கில் 1,000 விகாரைகளைக் கட்டு வதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது என தர்ம லிங்கம் சுரேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கு கண்ணை மூடிக்கொண்டு குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கி இருக்கின்றது. அதன் பின்னர் ஏனைய அரசாங் கமும் இந்தச் செயற்பாட்டைத் தொடர்ந்து வந்தது. வடக்கில் கடந்த வாரம் கூட இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கூட அங்கே ஒரு விகாரைக்கு அடிக்கல் நாட்டி இருந்தார்.

அதே போன்று பொன்னாலை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் தனியார் காணிகள் பறிக்கப் பட்டு இராணுவ முகாம்கள் அமைக்கும் செயற் பாட்டை மேற்கொண்டிருந்தார்கள். இவ்வளவு பஞ்சம் பட்டினியான காலங்களிலும் கூட சிங்கள தேசிய வாதத்தினரின் மனோநிலை மாறவில்லை. அவர்கள் கட்டமைப்பு சார் இனவழிப்புகளை மேற் கொள்கின்றார்கள்.

ஆகவே எமது மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். – இவ்வாறு சுட்டிக்காட்டியுள் ளார்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர் புஷ் பராஜ் துஷானந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் கோறளைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் குணராசா குணசேகரன் உள்ளிட்ட முக்கியஸ்தர் கள் கலந்து கொண்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற மக்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பொன்னாலை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!



மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்த இறுதி யுத்தத்தின்போது படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் நினைவேந்தல் வாரத்தில், பொன் னாலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்க ளுக்கு வழங்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவி னர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பொன் னாலையில் உள்ள பொது அமைப்புக்கள் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தன.

இறுதி யுத்தத்தின்போது, வன்னியில் சிக்கியிருந்த பொதுமக்களுக்கு அரசாங்கம் உணவுப்பொருள்களை அனுப்பியிருக்காமையால் மக்கள் பட்டினிச் சாவிற்கு தள்ளப்பட்டனர்.

எனினும், அங்கிருந்த சமூகத் தொண்டர்கள் கிடைத்த சொற்ப அரிசியைப் பயன்படுத்தி கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கினர். இதன்மூலமே லட்சக் கணக்கான மக்கள் பாதுகாக்கப்பட்டனர்.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், உரிமைக்கான விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை கஞ்சி காய்ச்சப்பட்டது.

ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இதில் ஆர்வத்துடன் பங்குபற்றி கஞ் சியை பருகிச் சென்றனர்.

# வரலாறுகள் திருத்தப்படும் தருணமிது உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்!

## 13ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல்

எதிர்வரும் மே 18ஆம் திகதி மத்திய லண்டனில் ட்ர பால்கர் சதுக்கத்தில் மாலை 5:30 மணிக்கு தொடங்கும் 13 ஆம் வருட முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல் நிகழ்வில் அனைவரும் ஒன்று திரண்டு இழந்த எம் மக்களுக்காக அஞ்சலி செலுத்துவதுடன் நீதிக்கான பயணத்தில் நம்பிக்கையுடன் செயல்படுவோமென உறுதி எடுப்போம்.

இவ்வாறு பிரித்தானியா தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வெற்றிகளை மட்டுமே பார்க்க விரும்பியவர்கள் விடு தலையின் பாதையில் வரும் பின்னடைவுகளை கண்டு துவண்டு விடுவர். பின் தங்கிடுவர். பாதைகள் மாறி திசை மாறி சென்றிடுவர். தற்காலிக வெளிச்சங்களை நோக்கி அகன்றிடுவர். ஆனால் தாம் வரித்துக் கொண்ட இலட்சியத்துக்காக எந்த இடர் நேரினும் போற்றுவார் போற்றினாலும் தூற்றுவோர் தூற்றினாலும் இலக்கு மட்டுமே நோக்கிடும் அர்ச்சுனனாக வாழ்வியல் இச்சை களுக்கு அப்பால் அயராது செயல்படும் மாமனிதர்கள் தான் கடும் சூறாவளியில் தாக்குப் பிடித்து வெற்றியின் கரைக்கு அழைத்து செல்லும் மீகாமான்களாவர்.

18 மே 2009 இற்குப் பின் இருந்த நிலை சற்று எம் கண் முன் வரட்டும்.

அதிர்ச்சியும், அயர்ச்சியும், கோபமும், பயமும், அவ லமும், அவமானமுமாக, மரணமும், சிறை வாழ்க்கை யுமாக, சுற்றியிருந்த இடமெல்லாம் நெருப்பும் புகை யுமாக, கருக்கப்பட்ட உடலங்களும் நொறுக்கப்பட்ட கட்டடங்களுமாக, தாயகத்தின் உள்ளேயும் வெளியேயும் துரத்தி துரத்தி வேட்டையாடப்பட்ட விலங்குகளாக இருந்த தமிழினம் தொலை தூரத்து வெளிச்சத்தைத் தேடியது.

அந்த நிலையிலும் கூட போர்க் குணமும் விடுதலை வேட்கையும் நேர்மையும் உறுதியும் புத்தாக்க சக்தியும் ஒரு சிலரிடமாவது தங்கியிருந்தது. ஒரு வழி தடுக்கப்பட் டால் புது வழி திறக்கும். அறிவும் ஆற்றலும் செயல் திறனும் உள்ளவர்கள் தளரா நம்பிக்கையுடன் ஒருங்கு திரண்டு எழுந்தது எம்மை ஒடுக்க நினைத்த எதிரிக்கு விழுந்த முதலடி.

உலகின் முன்னே தமிழினத்தை பயங்கரவாதிக ளாக – பிரிவினைவாதிகளாக – உருவகப்படுத்திய சிங் கள தேசம் இன்று கொடூர குற்றங்கள் புரிந்ததாக அடை யாளப்படுத்தப்பட்டுள்ளது. மாறாக தமிழினம் பாதிக் கப்பட்டவர்களாக – ஒடுக்கப்பட்டவர்களாக – எது வரினும் அயராது எழுந்து நீதிக்காகப் போராடும் இனமாக மதிக் கப்படுகிறது.

எம் விடுதலை போராட்டம் குரூரமாக சிதைக்கப்பட்டு 13 வருடங்களின் பின்னர் உலக ஒழுங்கில் ஒரு முக்கிய அமைவிடத்தில் பாரம்பரிய தாயகத்தை கொண்டிருக்கும் ஈழத் தமிழராகிய நாம் புறம் தள்ளி விட முடியாத ஒரு சக்தியாக இன்று எழுந்து வருகின்றோம்.

மாறாக, சிங்கள தேசம் தன் நாளாந்த அத்தியாவ சிய தேவைகளைக் கூட உலக நாடுகளிடம் யாசித்துப் பெற வேண்டி உள்ளது. இலங்கைத் தீவின் மக்கள் படும் அவலங்களை நாம் அனுதாபத்துடனேயே பார்க் கின்றோம். அடுத்தடுத்து வந்த அனைத்து ஆட்சியா ளர்களும் தமிழ் மக்கள் மீது பெரும் போரை கட்ட மைத்து சிங்கள தேசம் எம்மை அழிவின் விளிம்பிற்குத் தள்ளியது. இதனை விட மோசமான பொருண்மிய தடைகள் எம் மீது ஏவி விடப்பட்டாலும் அதனை நேர்மை யான திறமையான தலைமையுடன் வெற்றிகரமாக முறியடித்தோம். அனைத்து அதிகாரங்களையும் இறை மையுள்ள நாடு எனும் அங்கீகாரத்தையும் கொண்ட சிங்கள தேசம் செல்வழி தெரியாது தவிக்கின்றது. மற் றுமொரு ஆட்சி மாற்றம் இலங்கைத் தீவின் பிரச்சி னைகளைத் தீர்க்கப் போவதில்லை.

தூர இருந்தே எம் மண்ணை அளவற்று நேசித்த புலம்பெயர் மக்களாகிய நாம் எடுத்த முன் முயற்சிகளும் உலக ஒழுங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் நீதிக் கும் உரிமைக்குமான எம் கோரிக்கைகளை இன்று முன் நோக்கித் தள்ளியுள்ளது. சரியான நேரத்தில் சரி யான வியூகங்களை வகுத்து நெறி முறையாக செயற் பட வேண்டிய நேரமிது. எதிரி நிலை குலைந்து சரிவை சந்திக்கும் இந்த நேரத்தில், கடந்த 70 ஆண்டுகளில் சிறிலங்கா அனுபவிக்காத பெரும் பின்னடைவுகளை எதிர்கொள்ளும் வேளையில், எம் கரங்களை உறுதி யாகப் பிணைத்து சாதுரியமாக நீதிக்கான பயணத்தை இன்னும் வேகமாக முன் நகர்த்தும் வேளை இது.

இந்த நிகழ்வில் ‘Continuing Cycles of Violence and Genocide in Sri Lankaஆவண திரைப்படம் உலகெங்கி லும் பார்க்கக் கூடியதாக வெளியிட்டு வைக்கப்படும்.

பூகோள ஒழுங்கு மாற்றங்களும் தமிழ் மக்கள் மீதான தாக்கங்களும் குறித்த கண்காட்சி ஒன்று இளை யோர்களின் முன்னெடுப்பில் வருகை தருவோரின் பார்வைக்கு வைக்கப்படும்.

பிரித்தானிய மற்றும் உலக நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்ற உள்ளனர்.




முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்படும்.

சரியாக மாலை 6 மணி 18 நிமிடத்தில் (மே 18 18:18) அனைத்து மக்களும் இணைந்து ஒளி ஏற்றப்படும்.

ஒன்றுபடுவோம்! ஒடுக்கப்பட்ட எம் மக்களுக்காக உறுதி எடுப்போம்!

நீதிக்கான பயணத்தை விரைவுபடுத்துவோம்!

இடம்: Trafalgar Square, London WC2N 5DN,

திகதி:18 May 2022, Wednesday

நேரம்: 5:30 PM என்றுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நான்காவது நாள் நவாலியில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 16

இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளி னால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்றது

இந்தநிலையில் நேற்று (ஞாயிற்கிழமை) நான்கா வது நாளாக நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் பூசையைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயா ரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் – நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத் தில் 1995 ஆடி மாதம் 9ம் திகதி அரச விமான தாக்குத லில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக் கது.





# கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் வெசாக் தின நிகழ்வுகள்

கொழும்பு – காலி முகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தொடர்ந்து 37 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வெசாக் தின நிகழ்வு அங்கு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வை வண்ண வெசாக்கூடுகள் அமைத்தும், மரவள்ளி கிழங்கு மற்றும் பாற்சோறு பொது மக்க ளுக்கு பகிர்ந்தும் கோலாகலமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கொண்டாடினர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்று மாலை அதிகளவான கலை அம்சங்கள் மற்றும் அதிக தோரணைகள், டிஜிற்றல் தோரணைகள் காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

# மீண்டும் நிதியமைச்சர் பதவி நிராகரித்தார் அலி சப்றி!



மீண்டும் நிதியமைச்சராக கடமையாற்றுமாறு ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்றி நிராகரித்துள்ளார்.

குடும்ப உறுப்பினர்களின் அழுத்தத்தால் இந்தத் தீர்மானத்தை எடுத்து ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்தேன் என அலி சப்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொதுஜன பெர முனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தி லேயே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சர் பதவியை இராஜி னாமா செய்த பின்னர், அலி சப்றி நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டு 24 மணி நேரத்துக்குள் இராஜினாமா செய்தார்.

எனினும், அந்த இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்க மறுத்ததால், கடந்த 9ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து அமைச்சரவை கலைக்கப்பட்டதுடன், அலி சப்றியின் நிதியமைச்சர் பதவியும் இரத்துச் செய்யப் பட்டது.

# தொலைத்தொடர்பு வசதிகளின்றி இன்று மனித இனம் வாழ முடியாது

## இன்று உலக தொலைத்தொடர்பு தினம்

– பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன் –
(சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை கிழக்குப் பல்கலைக்கழகம்)




இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் தொலைத்தொடர்பு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மனிதனுடைய வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு முக்கியமான விடயமாக காணப்படுவது தொலைத்தொடர்பாகும். தொலைத் தொடர்பானது மனிதனுக்கு வரவேற்கத்தக்க மகத்தான சேவையாற்றி வருகின்றது. இன்றைய உலகில் மிக வேகமாக வளர்ந்து கொண்டுவரும் பல்வேறு துறைகளுள் தொலைத்தொடர்புத் துறையே முதன்மையானதாக விளங்குகின்றது.

ஆரம்ப காலத்தில் காணப்பட்ட தொலைத்தொடர்பிற்கும், தற்போது காணப்படுகின்ற தொலைத் தொடர்புகளுக்கும் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளன.

1969ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி உருவான சர்வதேச தொலைத் தொடர்பு அமைப்பானது தொலைத் தொடர்பு தினத்தை அறிமுகப்படுத்தியது. இந்த அமைப்பானது தொலைத் தொடர்புக்கு ஆற்றிவரும் மகத்தான சேவை மூலம் மனித குலத்திற்கு விழிப்புணர்வு செய்துவருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் இத் தினமானது ‘தொலைத்தொடர்பு நாட்டின் அபிவிருத்திற்கும், மனிதாபிமான வளர்ச்சிக்கும் உதவுவதை எடுத்துக்காட்டுதல்’ என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மனித குலத்தின் ஆரம்ப காலத்தில் செய்திகளை பரப்புவதற்கு, தீ மூட்டுதல், பறையடித்தல், முரசு ஊதுதல், குதிரையில் தகவலைக் கட்டி அனுப்புதல், தூதுவர்களை அனுப்புதல், புறாவைத் தூது அனுப்புதல் போன்ற தொலைத்தொடர்பு முறைகள் பயன்படுத்தப்பட்டன.



இதனைத் தொடர்ந்து அஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை முதன்முதலில் பயன்படுத்தியவர் பெர்சிய மன்னரான சைரஸ் என்பவராவார்.

அத்தோடு 1838 ஆம் ஆண்டு மின்சார வழி தந்தி தொடர்பை சாமுவேல் மோர்ஸ் என்பவர் தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்கினார். இவ்வாறு தொலைத் தொடர்பு வளர்ச்சியடைந்து இன்று முழு உலகுடன் நொடிப் பொழுதில் தொடர்பு கொள்ளும் அளவிற்கு மின்னஞ்சல், குறுஞ்செய்தி பரிமாற்றம் வரை தொலைத் தொடர்பாடல் துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது.

நவீன தொலைத்தொடர்பு வரலாற்றுப் பின்னணியில், 1450ஆம் ஆண்டு ஜோகன்ஸ் ஹட்டன்பாக் என்பவர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 1876 மார்ச் 10 ஆம் திகதி அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தொலைபேசி பாவனையை அறிமுகப்படுத்தினார். இவ்வாறு நவீன தொலைத் தொடர்பு வளர்ச்சியடையத் தொடங்கியது. இன்று வானொலி, கையடக்கத் தொலைபேசி, பக்ஸ், மின்னஞ்சல், இணையம், முகம்பார்க்கும் தொலைபேசி இணைப்புக்கள், செய்மதித் தொடர்புகள் என தொலைத்தொடர்பு அதீத வளர்ச்சியினைக் கண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் செயற்பாட்டிற்கு மூலகாரணமாக விளங்குவது தொலைத் தொடர்பு தொழிநுட்பமாகும்.

இன்றைய காலகட்டத்தில் தொலைத் தொடர்பு இல்லாமல் மனிதர்கள் இல்லை. மனிதனுடைய அனைத்துவிதமான தேவைகளும் தொலைத் தொடர்பை மையமாகக் கொண்டே அமைகிறது. மனிதனின் அனைத்துவிதமான செயற்பாடுகளும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்டது. தற்கால உலகில் எத்தனையோ துறைகள் காணப்படுகின்றன. அந்த அனைத்துவிதமான துறைகளின் செயற்பாட்டிற்கும் தொலைத்தொடர்பு தொழிநுட்பத் துறையே ஆணிவேராகக் தொழிற்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

அரசியல், வர்த்தகம், கருத்துப் பரிமாற்றம், கல்வி, வங்கி, பொழுதுபோக்கு, சுற்றுலா, செய்திப்பரிமாற்றம், தகவல் தொடர்பாடல், போக்குவரத்து.... என பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொலைத்தொடர்பு சேவை அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி, இயற்கை அனர்த்த செயற்பாடுகளை முன்னறிவித்தல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளல், போர் நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், முதலுதவி மற்றும் நிவாரப்பணிகள் போன்ற பல செயற்பாடுகளுக்கும் ஊன்றுகோலாய் அமைவது தொலைத் தொடர்பாகும்.

இன்றைய உலகம் கணனி மயப்படுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் கணனி முறைமைக்கும், தகவல் தொடர்பாடல் முறைமைக்குமான ஒரு பாலமாக தொலைத் தொடர்பு சேவை காணப்படுகின்றது. இன்றைய காலத்தில் கணனி முறைமைக்கும், தொலைத்தொடர்புக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புள்ளது. தகவல்களை சேமித்து வைக்கவும், அவ்வாறு சேமித்த தகவல்களை மீண்டும் பார்க்கவும் இவ்விரு முறைமையும் தொழிற்படுகின்றது. இணையம் எனப்படும் இன்டர்நெற், தொலைத் தொடர்பின் அதீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், தொலைத் தொடர்பு தொழிநுட்பம் ஆகியவற்றின் இணைப்பினைக் கொண்ட இணையமானது ஆரம்பத்தில் இராணுவ நடவடிக்கைக்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று அனைத்துத் தேவைகளுக்கும் இணையம் பயன்படுகின்றது. மேலும் தொலைத் தொடர்பின் செயற்பாட்டிற்கு செய்மதிகள் பாரிய பங்காற்றுகின்றன.

இன்றைய உலகில் தொலைத்தொடர்பு என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. உதாரணமாக கல்வித் துறையில் தொலைத்தொடர்பு சேவையின் பங்களிப்பு பற்றி பார்க்கும் போது, கடந்த காலகட்டத்தில் கொரோனா தாக்கத்தினால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான நேரடித் தொடர்புகள் மூலம் கல்வி செயற்பாட்டினை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இவ்வாறான நிலையில் தொலைத் தொடர்புகள் மூலமே கல்வி நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டது. இணையவழி கல்வி, தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற தொலைத்தொடர்பு சேவையின் ஊடாகவே அவர்களின் கல்வி நடவடிக்கை இடம்பெற்றது. இவ்வாறு பல துறைகளுக்கு தொலைத் தொடர்பு சேவை தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரையும், கிராமத்திலுள்ளவர்கள் தொடக்கம் நகரத்திலுள்ளவர்கள் வரை ஒரு நாளாவது தொலைத்தொடர்பினை பயன்படுத்தாமல் எவரும் இருக்க மாட்டார்கள். சற்று சிந்தித்துப் பார்த்தால், அலுவலகங்களில் பணி புரிபவர்களுக்கு கணனியும், இணையமும் அவசியம். வீட்டிலிருந்து ஒருவர் வெளியே சென்று தாமதமானால் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி அவசியம். வீட்டிலுள்ள பெண்கள் தங்களது பொழுதுபோக்கைக் கழிப்பதற்கும், உலக நாடுகளின் அன்றாட செய்திகளை அறிந்துகொள்வதற்கும் தொலைக்காட்சி மற்றும் வானொலி மிக மிக அவசியம்.

அதேபோன்று ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கும், தெரியாத இடங்களிற்குச் சென்று பல இடங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கும் நேவிகேன் என்ற அப்ளிகேன் பயன்படுகின்றது. இன்று எந்தவொரு இடத்திற்கு செல்வதற்கும் எவருடைய உதவியையும் நாட வேண்டியதில்லை. நம்மை இன்னொருவர் அழைத்துச் செல்வது போல் நாம் செல்லும் பாதை, நமக்கு முன்னால், நமக்குப் பின்னால் இருக்கும் பகுதிகள் போன்ற அனைத்தினையும் எமக்கு முன்கூட்டியே அறிவிக்கவும், தெளிவுபடுத்தவும் இந்த தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பாரிய பங்காற்றுகின்றது. தொலைவிலுள்ள உறவுகளோடு இருந்த இடத்தில் இருந்துகொண்டு முகமுகமாய்ப் பார்த்துப் பேசுவதற்கான வழியினை தொலைத்தொடர்பு தொழிநுட்பம் ஏற்படுத்தி தந்திருக்கின்றது. இதன் மூலம் உறவுகளிடையே உள்ள இடைவெளியினைக் குறைத்து நெருக்கமான தொடர்பினை மேற்கொள்வதற்கு தொலைத்தொடர்பு, வசதியினை ஏற்படுத்தி தந்திருக்கின்றது.

மேலும் ஒரு நாட்டினுடைய வரலாற்று நிகழ்வுகள், அந்த நாட்டினுடைய மகிமை, இனம், மதம், பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கங்கள், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துவிதமான தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு தொலைத்தொடர்பு எமக்கு உதவுகின்றது. உதாரணமாக சுற்றுலாத்துறையினை எடுத்துக் கொண்டால் அதனுடைய வளர்ச்சிக்கும், அபிவிருத்திற்கும் தொலைத்தொடர்பின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எனவே தொலைத்தொடர்பின் அபிவிருத்தியானது இன்றைய காலத்தில் மனிதனுக்கு பல சாதகமான, மகத்தான சேவையினை வழங்குகின்ற அதே வேளை, மனிதனுக்கு பாதகமான விடயங்களிற்கும் காரணமாய் இருக்கின்றது.

தொலைத்தொடர்பில் செய்மதியின் பங்களிப்பு உலகளாவிய நாடுகளினை வேவு பார்ப்பதற்கும், ஒரு நாட்டினுடைய இரகசியங்களை இன்னொரு நாடு அறிந்து கொள்வதற்கும், அதன் மூலம் வல்லரசுகளின் ஆதிக்கத்தை பேணிக் கொள்வதற்கும், போர் நடவடிக்கைகளுக்கும், அடிப்படையாக அமைகின்றது. ஆகவே எமக்கு கிடைத்திருக்கின்ற பெரிய பொக்கிசமான தொலைத்தொடர்பின் மகத்துவத்தையும், அதனுடைய மகிமையையும் புரிந்து கொண்டு அதனை சரியான விடயங்களிற்கு மட்டும் பயன்படுத்தி எமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வோமாக.



World Telecommunication Day
May 17

காலைக்கதிர் Kalaikkathir

# குறுகிய காலத்துக்கு இன்னும் மோசமான நிலை; சவாலை எதிர்கொண்டு அதன் பின் மீளெழுவோம்!

## நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் புதிய பிரதமர் ரணில் உறுதி



உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்தார். அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன். அந்தப் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அரசியல் தலைவராக மட்டுமின்றி, இலவசக் கல்வியை அனுபவித்து, கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்று, உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபா வருமானமாக உள்ளது என காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாயாகவே உள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபா. எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாயாகும். வருடத்திற்கான வரவுசெலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாயாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும் .

அதே போன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3,200 பில்லியன் ரூபாயாகும். நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1,950 மில்லியன் ரூபாயைச் செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபாதான்.

நாம் நேற்று அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக் கப்பட்ட எல்லையை 3,000 பில்லியனில் இருந்து 4,000 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்கத் ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக் கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிக மோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சில நாள்களில் வரிசைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மிக விரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தேடவேண்டிய உள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜுன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்களும் வரவுள்ளன. இன்றுவரை 40 நாள்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகெண்ணெய், எண்ணெய் ஏற்றிவந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாள்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால் நாம் இதற்குத் தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம் . அதேப் போன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது.

இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சொற்பமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியில் ஒரு டீசல் ஏற்றிய கப்பலை நேற்று கொண்டு வந்தோம். அதனால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைத்தது. அதே போன்றுவந்துள்ளஎரிவாயுகப்பலுக்கான கட்டணத்தை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சினைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதற்கு இடையில் , மற்றுமொரு உதாரணம் மருத்துவ மருந்துகளுக்கானத் தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாவாகும். அதே போன்று அரச ஔடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாகக் கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இயலாது உள்ளமையும் மிகவும் வருந்தத்தக்க விடயங்களாக உள்ளன. இருதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்திற்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022 ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவு – செலவு திட்டத்திற்கு பதிலாக புதிய வரவு – செலவு திட்டமொன்றை முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவு – செலவுத் திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன்.

2020 – 2021ல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது. 2021 மார்ச் 31 ஆகும் போது இதன் மொத்த நட்டம் 372 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நட்டத்தை வாழ்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்திற்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ.84.38 , 95 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ.71.19, டீசல் லீட்டர் ஒன்றில் ரூ.131.55, சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது.

அதே போல இலங்கை மின்சாரசபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17 ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபா வரை செலவு செய்கிறது . அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபா நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்குத் தேவையான பொருள்கள் சேவைகளின் பொருட்டே அதனைச் செய்ய வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாதுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்துப் பொய் சொல்வதற்கு எந்த வகை யிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும், அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஷ்டமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே.

எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன் பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக எதிர்கட்சி தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்தச் சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால – மத்தியக் கால – மற்றும் நீண்ட கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு , விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு, இளைஞர், யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாடு மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண் ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கழற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையைப் பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்தச் சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம் அல்லது ஒரு கூட்டத்தைப் பாதுகாப்பது அல்ல. முழு நாட்டினதும் மக்களைக் காப்பாற்றுவதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே .உயிரை பணயம் வைத்து இந்தச் சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்தச் சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

நான் எனது கடமையை நாட்டிற்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும். – என்றார் பிரதமர்.

காலைக்கதிர் Kalaikkathir

## நாடு சூறையாடப்பட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்றுத் தம்மைச் சந்தித்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரிடமேயே இத்தகைய தமது திட்டத்தை அவர் வெளிப்படுத்தினார் என அறிய வந்தது.

நாடு குறுகிய காலத்தில் இத்துணை தூரம் பொருளாதார வீழ்ச்சியை எதிர் கொண்டமைக்கு இயல்பாக, சாதாரண மாக நடந்தேறிய விடயங்கள் காரண மல்ல. திட்டமிட்ட முறையில் சூறையாடல் கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று பிரதமர் கருதுகிறார் எனத் தெரிகிறது.

அது தொடர்பில் தாம் நேரடியாக விசா ரிக்காமல், நாடாளுமன்றத்தின் தெரிவுக் குழு ஒன்றை நியமித்து, அதன் மூலமே விடயங்களைக் கண்டறிந்து, நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று பிரதமர் தம்மைச் சந்தித்த அரசியல் தலைவர் களிடம் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற தமது விருப்பத்தை தற்போதைய நாடாளுமன்ற அமர்வின் போது பிரதமர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படு கிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட் சியைப் பெரும்பான்மையாக கொண்ட தற்போதைய நாடாளுமன்றத்தில், அக் கட்சியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலமே அந்தக் கட்சியின் முன் னைய நிர்வாகத்தின் கீழ் இழைக்கப்பட்ட தவறுகள், குளறுபடிகள், சூறையாடல் களை அம்பலப்படுத்த புதிய பிரதமர் வியூகம் வகுக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

## முள்ளிவாய்க்காலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆலடியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் இல்லம் அமைந் திருந்த இடத்திலிருந்து இந்தப் பேரணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வல்வெட்டி துறை அம்மன் கோயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

## 3 மணி 40 நிமிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டு மணி நேரமும் – மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை 1 மணி 40 நிமிடங்களும் – மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

## 80 ஆயிரம் சிலிண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இரண்டு எரிவாயு கப்பல்களுக்கான கொடுப்பனவாக 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்(சுமார் 250 கோடி ரூபா) இன்றைய தினம் செலுத்தப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள் ளது.

3,700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் இன்று காலை நாட்டை வந்தடையவுள்ளதாக அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கப்பல் நாளை நாட்டை வந் தடைய உள்ளது.

இரண்டு கப்பல்களுக்கும் இன்று உரிய பணம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

## இராணுவப் பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அனுப்பி வைத்துள்ள அவசர கடிதம் மூலமே இந்தக் கோரிக்கையைஅவர் விடுத்துள்ளார்.

பாதுகாப்பு என்னும் பெயரில் இவ் வாறு இராணுவத்தினர் நிற்பது இயல்பு வாழ்வைப் பாதிப்பதாகவே இருப்பதனால் உடன் இராணுவத்தை அகற்றுமாறு அவர் கோரியுள்ளார்.

## மேற்குலகு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று கொக்குவிலில் உள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவல கத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்க அனுபவமிக் கவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை. ஆனால்

அனுபவமிக்கவர் என்பதற்காக ஜன நாயகத்துக்கு எதிரான செயலை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களால் நிராக ரிக்கப்பட்ட தரப்புக்களுடன் இணைந்து ஆட்சியை மாற்றியிருப்பதாக நாடகமா டுவதை ஏற்கமுடியாது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்பதற்கு முதல் நாள் என்னைச் சந்தித்து எமது கட்சியின் ஆதரவைக் கோரினார். ஆனால் நான் அதனை மறுத்து விட்டேன். ரணிலின் கெட்டித்த னத்தை அரசாங்கம் பாவிக்க விரும்பி னால் அதற்கென ஒரு முறை இருக்கின் றது.

இந்திய மற்றும் மேற்கு நாடுகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு கட்சி கள் தற்போது முனைப்பு காட்டி வருகின் றன.

முதுகெலும்பில்லாத இந்திய அரசின் அடிவருடிகளான சில தமிழ் கட்சிகள் விழுந்து விழுந்து ரணில் விக்கிரமசிங் கவை வரவேற்று மக்களுக்கு உண்மை யைச் சொல்லாது, ஜனாதிபதி கோட்டாப யவை எதிர்க்கின்றோம் எனப் பொய் கூறி, மலசலம் கூடம் செல்வதற்குக் கூட ஜனா திபதியிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கு ஆதரவளிப்பது முற்றிலும் கண் டிக்கப்பட வேண்டியது .

இந்திய அரசின் எடுபிடிகளாக செயற் படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்ப டுகின்றன. அதேபோல ஒரு தரப்பு – எங்களைத் தோற்கடிக்கத் தாங்கள் ஒரு தேசியவாதி என நடிப்பவர் – அமைச்சர் பதவியையும் ஏற்பார் என அறிவித்தி ருக்கின்றார்.

சுமந்திரன் கொஞ்சம் நாசூக்காக அர சாங்கத்துடன் இணையமாட்டோம் என் றார். ஆனால் நாடாளுமன்றில் உள்ள குழுவொன்றின் தவிசாளர் பதவியினை ஏற்பதாகக் கூறியிருந்தார்.

ஆனால் அதையும் தாண்டி பெரும் தேசியவாதியாகத் தன்னைக் காட்டுகின்ற விக்னேஸ்வரன் ஐயா தான் அமைச்சர் பதவி ஏற்கத் தயாராக உள்ளேன் என்கி றார்.

எனவே தமிழ் மக்கள் ஒன்றை விளங் கிக் கொள்ள வேண்டும் .

இனப்படுகொலைகளை மேற் கொண்ட ராஜபக்ஷ தன்னுடைய குடும்ப ஆட்சியைப் பாதுகாப்பதற்கு மேற்கிடமும் இந்தியாவிடமும் சரணடைந்து இருக் கின்ற நிலையில், ரணில் விக்கிரமசிங்க வின் நியமனத்தை வைத்து மேற்கும் இந்தியாவும் விரும்பும் வகையிலே தமிழ் அரசியல் கட்சிகள் இனப்படுகொலையா ளியின் ஆட்சிக்கு முண்டு கொடுக்கப் போகின்றார்கள்.

கடந்த முறை கூட இவ்வாறு காப்பாற் றினர். அதேபோல இந்த முறை கோட்டா பய முதுகெலும்பில்லாத தமிழ் கட்சியுடன் இணைந்து மீண்டும் இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்பட்ட – நீதியைக் கோரிப் போராடுகின்ற – தமிழ் மக்க ளுக்கு முகத்தில் அறையும் வகையில் அந்த தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்ற தமிழ் கட்சிகள் இன்றைக்கும் செயற்படுகின்றன. முற்றுமுழுதாக மக்க ளால் நிராகரிக்கப்பட்டு தேசிய பட்டியல் ஊடாக வந்த ரணில் விக்கிரமசிங்க பிரத மராக பதவி ஏற்றமை அனைத்து ஜன நாயக விதிமுறைக்கும் முரணானது. – என்றார்.

## ஜோன்ஸ்டன் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாளிகைக்கு முன்பாக 'மைனா கோ கம' என்னும் பெயர்களில் தன்னெழுச்சியாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங் களை மேற்கொண்டு வந்த பொதுமக்கள் மீது கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சிறீலங்கா பொதுஜன பெரமுன வின் ஆதரவாளர்கள் தாக்குதல்களை நடத்தி வன்முறையில் ஈடுபட்டிருந்தனர்.

# ஜெயசுதனின் ‘அவதாரம்’ சிறுகதை நூல் வெளியீடு!







பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. உமாசுதன் எழுதிய 'அவதாரம்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் மருத்துவர் வை. யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு நூலை வெளி யிட்டு வைத்தார். நூலாசிரியரின் பெற் றோர் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபர் இ. செந்தில்மாறன், சமுதாய மருத் துவநிபுணர் எஸ்.சிவகணேஸ் ஆகியோர் சிறப்புரைகளையும், திருமதி மீரா அருள் நேசன் வெளியீட்டுரையும், என்.விஜய சுந்தரம் நயப்புரையையும் ஆற்றினர்.

நூலாசிரியர் ஜே. உமாசுதன், ஜெயசு தன் எனும் பெயரில் பத்திரிகைகள் மற் றும் சஞ்சிகைகளில் சிறுகதைகள், கவிதை களை எழுதி வருபவர். அண்மையில் இவ ரது கவிதைகளின் தொகுப்பு நூல் ஒன்றும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வன்முறைகளால் வீடு மற்றும் உடைமைகளை இழந்த அனைவருக்கும் நீதி வழங்குவதே எனது முதல் பணி

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபதம்

அண்மைய வன்முறைகளால் வீடு மற்றும் உடைமைகளை இழந்த அனை வருக்கும் நீதி வழங்குவதே தனது முதன் மையான பணி என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதவியேற்றுக் கொண்டதன் பின்னர், கருத்து வெளியிடும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இது தொடர்பான அனைத்து தகவல் களையும் பெற்றுக்கொள்வதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல் படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மே லும் தெரிவித்தார்.

அனைத்து தகவல்களையும் பெற்று சந்தேகநபர்களை சட்டத்தின் முன் நிறுத் துவதற்கான துரித வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் பிர சன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## மீள ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

5 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊர டங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு முதலில் அறி வித்திருந்தது.

எனினும் நேற்று இரவு 11 மணி முதல் இன்று அதிகாலை 5 மணி வரையே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என திருத்தப்பட்ட அறிவித்தலை ஜனாதி பதி ஊடகப் பிரிவு பின்னர் வெளியிட் டிருந்தது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பொர்னாண்டோ, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஞ் சீவ எதிரிமான்ன, மிலான் ஜெயதிலக, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னகோன், மொரட்டுவ மே யர் சமன்லால் பெர்னாண்டோ, கொழும்பு மாநகர கவுன்சிலர் மஹிந்த கஹன்டக மகே மற்றும் டான் பிரசாத் உள்ளிட்ட 22 பேரைஜ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு சட் டமா அதிபர் நேற்று உத்தரவிட்டுள் ளார்.

இந்த 22 சந்தேக நபர்கள் தொடர்பில் நேரடி,சூழ்நிலை மற்றும் தொழில்நுட்ப சாட்சியங்கள் இருப்பின் அவர்களை உட னடியாகக் கைது செய்து, சந்தேக நபர் களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் சந்தேக நபர்கள் அவர்களின் முகவரிகளில் இல்லாவிடின் சாட்சி யங்களை முன்வைத்து அவர்களைக் கைது செய்வதற்கு நீதிவான் ஒருவரிட மிருந்து திறந்த பிடியாணையைப் பெற வேண்டும் என்றும், உரிய முகவரிகளில் இல்லாத சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியை நாடுமாறும் சட்டமா அதிபர் தெரிவித்துள் ளார்.

## பாடசாலைகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது,

அண்மையில் ஏற்பட்ட அமைதி யின்மை காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை யால் பாடசாலைகள் இயங்குவதில் இடை யூறுகள் ஏற்பட்டன. பாடசாலை நடவ டிக்கைகளை வழமை போன்று தொடர முடியாமல் போனது.

எவ்வாறாயினும் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த் தப்படும் நிலையில் பாடசாலை நடவடிக் கைகளை வழமை போன்று பராமரித்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் பாடசாலை விவகா ரங்களுக்கான மேலதிகச் செயலாளர் லலித் எகொடவில தெரிவித்தார்.

## யாழ்.தொழில்நுட்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவ தாவது:-

தொழில்நுட்பகல்லூரிக்குஅருகாமை யில் உள்ள வீடு ஒன்றில் வெளி மாவட் டத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் தங்கி நின்று கல்வி கற்று வருகின்றனர்.

நேற்று 4 மோட்டார் சைக்கிள்களில் வந்த எட்டுப்பேர் அந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -13

### தமிழ் அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகள், அறிவிப்புகள்

'ரணில் தலைமையில் உருவாகும் அரசை ஆதரிக்கவும் மாட்டோம், வீழ்த்தவும் மாட்டோம்' என மலையக மக்களின் ஆதரவை பெற்றுக்கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார். அமைச்சர் பதவியை அவர் ஏற்பதற்கான எந்த சாத்தியக்கூறுகளும் தென்படவில்லை

ராஜபக்ஷக்களோடு மிக நெருக்கமாக இருந்த செந்தில் தொண்டமான் மலையக மக்களின் மிகப்பெரிய பிரதிநிதித்துவத்தை கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர். அக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி, மஹிந்த, கோட்டா இருவருமே பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாடுகளுக்கு ஆதரவு தந்தது. இப்பொழுது ஒரு பஸ் பழுதடைந்து நின்று விட்டதால் இன்னும் ஒரு பஸ்ஸைக் கைகாட்டி நிறுத்தி ஏறுவது தப்பல்ல என ரணிலின் அரசுக்கு வரவேற்புக் காட்டி, மந்திரி பதவிக்கும் இணங்கியுள்ளனர். அவர்கள் கை காட்டி மறிப்பது இன்னுமொரு அரசாங்க CTB பஸ் என்பதை அவர்கள் உணர்ந்தனரோ தெரியவில்லை.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், ஜனநாயக நடைமுறைகளை கடைப்பிடிக்காமல் ரணிலைப் பிரதமராக்கியமையைத் தாங்கள் ஆதரிக்கவில்லை என்றார். எனினும் அவரின் (ரணிலின்) அனுபவங்களின் அடிப்படையில், அவரது பொருளாதார முயற்சிகளுக்கு இடையூறு தராமல், ஆதரித்து நடப்போம், அந்த முயற்சிகளில் குறுக்கிட்டுச் செயற்பட்டு, அவரை வீழ்த்துவதற்கு ஒத்துழைக்க மாட்டோம் என்கிறார். அதேசமயம், அவர், நாடு பொருளாதார நெருக்கடிகளை மட்டுமே எதிர்கொள்ளவில்லை, ஆழமான அரசியல் நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடக்கூடாது என்ற யதார்த்தத்தையும் நினைவூட்டுகிறார்

நீதியரசர் விக்னேஸ்வரன் ஓர் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளலாம் என ஆரம்பத்தில் செய்திகள் வந்தன. தமிழ் மக்களின் தலைவர்களுக்கு தங்கள் இனத்தின் பிரச்சினைகள், பாதிப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது தலையாய கடமை, ஆனாலும் இந்த அணுகுமுறைகளின் அறிவிப்புகளால் அவர்கள் தேசிய பொறுப்புணர்வை நியாய வழியிலும் மனச்சுத்தியோடும் கையாளுகிறார்கள் என அவரின் கருத்து வரவேற்புப் பெறுகிறது.

அது போலவேதான் தமிழ்நாட்டு மாநில அரசின் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பும் கவனிக்கத் தக்கது.

"இலங்கைத் தமிழ் மக்களுக்கு அத்தியாவசிய நிவாரண உதவிகள் தருவோம்" என அவர் அறிவிக்க, உடனடியாக மனோ கணேசனும் சுமந்திரனும் "அப்படி தமிழர்கள் என்று பாரபட்சம் காட்டி அனுப்புதல் சரியல்ல, அவை எல்லா மக்களுக்கும் எனத் தரப்படவேண்டும்" – என்று கூறினார்கள். அதனைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என தமிழ்நாட்டின் முதலமைச்சர் அறிவித்தார். இங்கும் தமிழரின் பாரம்பரிய பெருமை பேசப்பட்டது.

இதனைப் பற்றி நன்றி நவிலல் பேட்டி ஒன்றில் மனோ கணேசனும் "தமிழர்களுக்கு என்று மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த இலங்கையர்களுக்கும் உதவத் தீர்மானித்து, அதற்காக இந்திய ஒன்றிய அரசின் அனுமதியையும், இலங்கை அரசின் ஒப்புதலையும் பெற்று, அதன் மூலம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கூற்றை மெய்யாக்கி, சமகால அர்த்தத்தில் வெளிப்படுத்தி உள்ளீர்கள். பசி யாவருக்கும் பொதுவானது. அரிசி, பால்மா, மருந்து என்பவை போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு மக்கள் எல்லோரும் இன்று போராடுகிறார்கள். அதை உணர்ந்து நீங்கள் செய்யும் நிவாரண உதவி உங்களை சமூகநீதிக் காவலனாக எடுத்துக்காட்டுகிறது... முக்கியமாக தெற்கிலும், வடக்குக் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் எதிர்காலம் சிங்கள மக்களுடனும், தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களுடனும் பின்னிப்பிணைந்துள்ளது. இதுதான் இலங்கை இனப்பிரச்சனையின் அடிப்படை. இதை இன்று தமிழக முதல்வர் புரிந்து கொண்டுள்ளார் என நம்புகிறேன். அவரது புரிந்துணர்வு இலங்கையின் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்களம் பேசும் மக்களுக்கும், சமத்துவமாகவும் சந்தோமாகவும் வாழ வழிகாட்டும் என்று நம்புகிறேன். தமிழ் மக்கள் எழுபத்தியாறு வருடங்களாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், தற்போதைய பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, அவற்றையும் தாண்டிய எங்கள் மொழி, இன, மதப் பிரச்சினைகளும் உள்ளன. அதற்கு அடிப்படை சிங்கள மக்களில் உறங்கிக்



கிடக்கும் வரலாற்று அச்ச உணர்வுகளும் தான்" – என்றும் கூறுகிறார்.

"இதுதான் இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை. அதனை இன்று தமிழக முதல்வர் புரிந்து கொண்டுள்ளார்" – என மனோ கணேசன் கூறுவது முதல்வருக்கு விசித்திரமாக இருக்கும்.

"தமிழீழம் அமையாதது ஒன்றுதான் தன் வாழ்வில் காண முடியாத – அடைந்து விடமுடியாத – கனவாக இருந்தது. அது அமையவேண்டும்" – என்று பல பத்திரிகைகளில், பொதுத் தளங்களில் பேசிய மறைந்த முதலமைச்சர் கருணாநிதியின் பாசறையில் 17 வயதிலிருந்து அரசியல் செய்து, அவரது வாரிசாக வளர்ந்தவர் இந்த முதல்வர். அந்த வயதில் இருந்தே தமிழ்நாட்டில் அகதிகளாக குடிபெயர்ந்த மக்களிடையேயும், அங்கு இயங்கிய அனைத்து விடுதலைப் போராளிகளோடும் நெருக்கமாகப் பழகி, அவற்றிலிருந்து தமிழ் மக்களின் அவலங்களையும் அடிப்படைகளையும் அபிலாசைகளையும் புரிந்து கொண்டவர் அவர். முதல்வர் எடுத்த நிலைப்பாட்டில் ஓர் ஆழம் இருந்தது. அதனை நாமே ஊதிப் பெரிதாக்கி பெருமையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அவற்றை பின்பு பார்க்கலாம்.

### இன்னும் சில அணுகுமுறைகள்

காணாமல் போன தங்களது உறவுகளைத் தேடும் உறவினர்களோ காலிமுகத்திடல் போராட்டம் குறித்து வேறு விதமாகச் சிந்திக்கிறார்கள்

தாங்கள் தங்கள் உறவுகளை தேடி 1,900 நாள்களுக்கு மேல் கடந்து விட்டது. இதுவரை அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற செய்தியே இல்லை. அவர்களைக் கண்டுபிடிக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்றவற்றை அழுத்தம் தாருங்கள் எனக் கோருகிறார்கள். அதற்கு மேலாக இலங்கையின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள 'தமிழர் இறையாண்மைக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும்' என்றும் செய்தி அனுப்புகிறார்கள். தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தை ஆளட்டும் என்பதான அணுகுமுறையாக இது உள்ளது.

ஸ்ரீலங்காவின் சட்டத்தரணிகள் சங்கம் என்ற அமைப்பு போராட்ட நிலைமைகள் தோன்றிய நாள்களிலிருந்தே அதனை நிவர்த்தி செய்து, சுமுகமான நிலைக்குப் பொருளாதாரத்தைத் திருப்பி – திருத்தி – நெறி கட்டப் பாடுபட்டவர்கள்.

போராட்டக்காரர்கள். அரசியல் கட்சிகள், பொது நல அமைப்புகள் போன்றவற்றையும் கலந்து எல்லாப் பகுதிகளுடனும் ஊடாடி, சில வழிமுறைகளைச் சமர்ப்பித்தனர். அவர்கள் சமர்ப்பித்த இந்த வழிமுறைகள் பலராலும் வரவேற்கப்பட்டன.

அதில் அவர்கள், நாட்டில் ஓர் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்பதோ, உடனடி அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்யலாம் என்பதோ இயலாத காரியம் என்று கூறியிருந்தார்கள். அத்தோடு, நாட்டின் சகல மக்களின் தனித்துவங்கள் பேணப்பட்டு, அவர்கள் எல்லோருமே இந்தத் தேசத்தின் மக்கள் என்ற எண்ணப் பாங்கு கட்டி எழுப்பப்படுவது அவசியம் எனவும் வற்புறுத்தி இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினைகளைத் தோற்றுவித்த பொருளாதார நெருக்கடிகளையும், அவற்றைக் கொண்டுவந்த காரணிகளையும் ஆராய்வதற்கான உகந்த தருணங்களை ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்கள்.

அவர்களுடைய முயற்சியினால் சட்டபூர்வமாக ஜனாதிபதியும் பிரதமரும் கௌரவமாகப் பதவி விலக வழிகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தாலும், அவற்றை ஜனாதிபதியோ பிரதமரோ ஏற்றுக் கொள்ளாது பிரதமர் தனது வழமையான பாதையைத் தேர்ந்தெடுத்து, தனக்கு வினையைத் தானே தேடினார். இப்படியான எண்ணங்களாலும் போக்குகளாலும் ராஜபக்ஷக்கள் அவர்கள் இலகுவாக தங்கள் அதிகாரங்களையும், நாட்டைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள் வதையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்பது தெளிவு. எவ்வளவு கீழ்தரமான வழிகளுக்கு போகவேண்டி இருந்தாலும், அவற்றைக் கடைப்பிடித்து அதிகாரங்களை தக்க வைக்கவே அவர்கள் முயல்வர்.

(வளரும்)

